வேண்டும் என்பது நமது கொள்கையாகும். அந்த வகையில் தான் மாவட்டக் கல்வி அதிகாரிகளும், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளும் இதில் அதிக ஊக்கம் காட்டவேண்டு மென்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

Buildings for High Schools

* 280 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to stated whether there are proposals under the consideration of the Government to put up additional building for the Nattalam Government High School in Kanyakumari district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம், கட்டிடம் கட்டுவதற்கு தேவையான கருத்துரு உருவாக்குவது குறித்து மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

* 281 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு கல்வி, சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரிலுள்ள அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தனிக் கட்டடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

* 282 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to construct additional buildings for the High School at Berikai Town in Hosur taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.